**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**


கால்நடை பராமரிப்புத்துறை - கால்நடை மருத்துவ நிலையங்கள் திருநெல்வேலி, சேலம் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள பெரு மருத்துவமனைகளை பண்முக மருத்துவமனைகளாக தரம் உயர்த்துதல் - ஆணை வழங்கப்படுகிறது.


---

**கால்நடை பராமரிப்பு (ம) மீன்வளத் (கபா3) துறை**

அரசு ஆணை (நிலை) எண். 43 நாள் : 24.4.2003

படிக்கப்பட்டது :

கால்நடை மருத்துவப் பணிகள் இயக்குநர் கடித ந.க.எண். 93884/ஜே/2002 நாள் 7/11/2002 மற்றும் 7.1.2003.

----

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் கால்நடை மருத்துவ பணிகள் இயக்குநர், அமைச்சர் (கால்நடை பராமரிப்பு) அவர்களால் மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்ட அறிவிப்பின்படி திருநெல்வேலி, சேலம் மற்றும் திருச்சி ஆகிய மூன்று மாநராட்சிகளிலுள்ள கால்நடை பெருமருத்துவமனைகளை பண்முக மருத்துவமனையாக உயர்த்துவதற்கு ரூ.7.49 இலட்ச மதிப்பீட்டில் கருத்துரு ஒன்றினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. கால்நடை மருத்துவப் பணிகள் இயக்குநரின் இக்கருத்துருவினை அரசு பரிசீலித்து திருநெல்வேலி, சேலம் மற்றும் திருச்சி ஆகிய மூன்று மாநகராட்சிகளிலுள்ள கால்நடை பெருமருத்துவமனைகளை பண்முக மருத்துவமனையாக உயர்த்துவதற்கும் அரசிற்கு கூடுதல் செலவினம் ஏதுமின்றி ஏற்கெனவே மருந்துகள் வாங்குவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள 2003/2004 நிதி ஒதுக்கீட்டில் செலவினத்தை மேற்கொள்வதற்கும் ஆணை வழங்குகிறது.

3. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.5871/நிதி(காபமமீ)/2003-1, நாள் 24.2.2003ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.மாதவன் நம்பியார்,
அரசு செயலாளர்.

பெறுநர்

கால்நடை மருத்துவப் பணிகள் இயக்குநர், சென்னை 6.

கருவூல அலுவலர்கள், திருநெல்வேலி, சேலம் மற்றும் திருச்சி.
மாநில கணக்காயர், சென்னை 18/18(பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை 35.
நிதித்துறை, சென்னை 9.
இருப்புக்கோப்பு/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/